பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

07 11 2025 7 15

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- வந்தேமாதர பாடலின் 150வது ஆண்டு விழாவையொட்டி நினைவு தபால் தலையையும், நாணயத்தையும் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று வெளியிடுகிறார்.
- முன்பேர ஒப்பந்த வர்த்தகத்தில் உள்ள அபாயங்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கேட்டுக்கொண்டுள்ளார்.
- தாய்லாந்து மற்றும் மியான்மர் நாடுகளில் சட்டவிரோதமாக குடியேறியுள்ள இந்தியர்களை பத்திரமாக மீட்பதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.
- பாகிஸ்தான் - ஆஃப்கனிஸ்தான் இடையேயான அமைதிப் பேச்சுவார்த்தை துருக்கி தலைநகர் இஸ்தான்புல்லில் தொடங்கியுள்ளது.
- உலகக்கோப்பை செஸ் போட்டியில் இரண்டாம் சுற்றின் டை-பிரேக் போட்டிகள் இன்று நடைபெறுகின்றன.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

வந்தேமாதர பாடலின் 150வது ஆண்டு விழா கொண்டாட்டத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி புதுதில்லியில் இன்று தொடங்கி வைக்கிறார்.

இந்த நிகழ்ச்சியின்போது நினைவு தபால் தலையையும், நாணயத்தையும் அவர் வெளியிடுகிறார்.

வந்தேமாதரம் பாடல் நாட்டில் உள்ள ஒவ்வொரு குடிமகனையும் தேசபக்தியை தூண்டும் விதத்தில் எழுதப்பட்டுள்ளதாக பிரதமர் தனது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இதனையொட்டி வந்தேமாதரம் பாடல் பொது இடங்களில் பாடப்படும் என்றும், இதில் நாட்டு மக்கள் அனைவரும் பங்கேற்று சிறப்பிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தியாவின் ஒற்றுமையையும், தேசத்தின் பெருமை எடுத்துரைக்கும் இந்தப் பாடலை 1875ஆம் ஆண்டு நவம்பர் 7ஆம்

Bankim Chandra Chatterji தனது ஆனந்த் மட் நாவலில் எழுதினார்.

இதன் 150வது ஆண்டு விழா ஓராண்டு நடைபெற இருப்பதாக மத்திய அரசு ஏற்கனவே அறிவித்துள்ளது.

<<<<>>>>

முன்பேர ஒப்பந்த வர்த்தகத்தில் உள்ள அபாயங்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கேட்டுக்கொண்டுள்ளார்.

மும்பையில் நடைபெற்ற 12வது வங்கி மற்றும் பொருளாதாரம் தொடர்பான உச்சிமாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், முன்பேர வர்த்தக ஒப்பந்தத்தில் ஈடுபடும் சில்லரை முதலீட்டாளர்களை அரசால் தடுக்க முடியாது என்றும், ஆனால் அதில் உள்ள அபாயங்கள் குறித்து அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

செபி அமைப்பின் ஆய்வின்படி 91 சதவீதத்திற்கும் அதிகமான நபர்கள் இந்த வர்த்தகத்தில் ஈடுபட்டு இதுவரை ஒரு லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு இழப்புகளை சந்தித்துள்ளதாக கூறியுள்ளது.

<<<<>>>>

இந்தியா-லக்ஸம்பர்க் இடையே அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் விண்வெளி ஆய்வுகளில் ஒத்துழைப்பு வழங்க இரு நாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளதாக மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் லக்ஸம்பர்க் நாட்டின் தூதர் திரு. Christian Biever சந்தித்து உரையாடினார்.

அப்போது பைசர் பாதுகாப்பு, குவாண்டம் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு ஆகியவற்றில் புதிய முயற்சிகளை கூட்டாக எடுப்பது குறித்து உரையாடினார்.

<<<<>>>>

பிஹார் சட்டப்பேரவைக்கான முதற்கட்ட தேர்தலில் 64 புள்ளி ஆறு ஆறு சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இந்த தேர்தலில் அம்மாநில துணை முதலமைச்சர்கள் திரு. சாம்ராட் சௌத்ரி, விஜயகுமார் சின்ஹா உள்ளிட்ட 16 அமைச்சர்களும் ராஷ்ட்ரிய ஜனதா தள தலைவரும், அக்கட்சியின் முதலமைச்சர் வேட்பாளருமான திரு. தேஜஸ்வி பிரசாத் யாதவ் ஆகியோர் போட்டியில் உள்ளனர்.

வாக்குப்பதிவின்போது ஒருசில இடங்களில் வன்முறைகள் நடைபெற்றன.

அதுதவிர பொதுவாக தேர்தல் அமைதியான முறையில் நடந்துள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி ஒரு சிறந்த மனிதர் என்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் மீண்டும் புகழாரம் சூட்டியுள்ளார்.

நேற்று வெள்ளை மாளிகையில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பின்போது பேசிய அவர், இந்தியாவுடனான வர்த்தக பேச்சுவார்த்தைகள் மிகச் சிறப்பாக நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் இந்தியா, ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய் வாங்குவதை பெருமளவில் குறைத்துவிட்டதாகவும் திரு. ட்ரம்ப் கூறினார்.

மேலும் 2020ஆம் ஆண்டு தாம் இந்தியாவிற்கு மேற்கொண்ட பயணத்தை நினைவுகூர்ந்த அவர், தற்போது பிரதமர் திரு. நரேந்திர மோடி தம்மை இந்தியாவிற்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளதாகவும், இதனையடுத்து விரைவில் இந்தியாவிற்கு தாம் பயணம் மேற்கொள்ள இருப்பதாகவும் அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தாய்லாந்து மற்றும் மியான்மர் நாடுகளில் சட்டவிரோதமாக குடியேறியுள்ள இந்தியர்களை பத்திரமாக மீட்பதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

தாய்லாந்து தலைநகர் பாங்காக்கில் உள்ள இந்திய தூதரகத்தில் 26 பெண்கள் உட்பட 270 பேரை தாய்லாந்து அரசு இந்திய அதிகாரிகளிடம் ஒப்படைத்தது.

இதையடுத்து இவர்கள் அனைவரும் இந்திய விமான்படையின் சிறப்பு விமானம் மூலம் இந்தியாவிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

தாய்லாந்து நாட்டின் கணினி தொழில்நுட்ப மையங்களில் வேலை தருவதாக் கூறி சட்டவிரோதமாக அழைத்துச் செல்லப்பட்ட இந்தியர்கள் அங்குள்ள சைபர் குற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்தாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

மியான்மர் வழியாக தாய்லாந்து நாட்டிற்கு அழைத்துச் செல்லப்படும் நபர்கள் இம்மாதிரியான குற்றச் செயல்களில் ஈடுபடுத்தப்படுவதாகவும், இதையடுத்து வெளிநாடுகளில் வேலைதேடுவோர் அந்த நிறுவனங்களின் பின்னணிகளை சரிபார்த்து செல்லுமாறு இந்திய தூதரகம் கேட்டுக்கொண்டுள்ளது.

<<<<>>>>

பாகிஸ்தான் - ஆஃகனிஸ்தான் இடையேயான அமைதிப் பேச்சுவார்த்தை துருக்கி தலைநகர் இஸ்தான்புல்லில் தொடங்கியுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையே சமீபத்தில் ஏற்பட்ட எல்லைதாண்டிய தாக்குதல்களை நிறுத்தும் விதத்தில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 15ஆம் தேதி இருதரப்பினருக்கும் இடையே சண்டைநிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அக்டோபர் 19ஆம் தேதி தோஹாவிலும், 25ஆம் தேதி இஸ்தான்புல்லிலும் 2 சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

இந்நிலையில் இருதரப்பிற்கும் இடையே எல்லைதாண்டிய துப்பாக்கிச் சூடு நடைபெற்றதையடுத்து, மீண்டும் அமைதிப் பேச்சுவார்த்தை தொடங்கியுள்ளது.

<<<<>>>>

சூடானின் ஆயுதப் படைக்கும், துணை ராணுவ அதிரடிப்படைக்கும் இடையே கடந்த 2 ஆண்டுகளக நடைபெற்று வரும் சண்டையை நிறுத்துவதற்கு அமெரிக்கா அறிவித்துள்ள அமைதித் திட்டத்தை ஏற்றுக்கொள்வதாக இருதரப்பும் தெரிவித்துள்ளது.

இந்த அமைதிப் பேச்சுவார்த்தையில் சவுதி அரேபியா, எகிப்து, ஐக்கிய அரபு அமீரம் ஆகிய நாடுகள் ஈடுபட்டுள்ளன.

இந்த சண்டை காரணமாக பல லட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களின் இயல்பு வாழ்க்கைக்கு தேவையான நடவடிக்கையை எடுப்பதற்கு இந்த அமைதிப் பேச்சுவார்த்தை உதவும் என்று மனித உரிமை அமைப்புகள் தெரிவித்துள்ளன.

<<<<>>>>

உலகக்கோப்பை செஸ் போட்டியில் இரண்டாம் சுற்றின் டை-பிரேக் போட்டிகள் இன்று நடைபெறுகின்றன.

கோவாவில் நடைபெற்று வரும் இந்தப்போட்டியில் இந்தியாவின் பிரக்ஞானந்தா, விதித் குஜராத்தி, நிஹால் ஸரீன், பிரனவ், எஸ்.எல். நாராயணன், கார்த்திகேயன் முரளி, ப்ரானேஷ், ரோனக் சாத்வனி ஆகிய 8 வீரர்கள் விளையாடுகின்றனர்.

<<<<>>>>

இந்திய ஹாக்கியின் நூற்றாண்டு கொண்டாட்டம் இன்று தொடங்குகிறது.

இதன் ஒரு பகுதியாக 550 மாவட்டங்களில் ஆயிரத்து 400க்கும் மேற்பட்ட போட்டிகள் நடைபெற உள்ளன.

இன்று காலை புதுதில்லியில் உள்ள மேஜர் தியான்சந்த் விளையாட்டரங்கில் இந்திய ஹாக்கியின் சாதனைகள் குறித்த சிறப்பு நிழ்ச்சி நடைபெறுகிறது.

இதில் ஹாக்கிப் போட்டிகளில் சிறப்பாக விளையாடி நாட்டிற்கு பெருமை சேர்த்த வீரர்கள் கௌரவிக்கப்படுகிறார்கள்.

இந்திய ஹாக்கி தொடர்பான புகைப்படக் கண்காட்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதுவரை 8 ஒலிம்பிக் போட்டிகளில் இந்தியா தங்கப்பதக்கம் பெற்றுள்ளது.

மேலும் 13 போட்டிகளில் இறுதிப்போட்டி வரை விளையாடி உள்ளது.

<<<<>>>>

2026ஆம் ஆண்டுக்கான மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் அணிகள் தக்க வைத்த வீராங்கனைகள் பட்டியல் நேற்று வெளியிடப்பட்டது.

நடப்பு சாம்பியனான மும்பை அணி ஹர்மன் ப்ரீத் கவுரையும், பெங்களூரு அணி ஸ்மிருதி மந்தனாவையும் தக்க வைத்துக்கொண்டுள்ளது.

<<<<>>>>

பஞ்சாப் மாநிலம் அம்ரித்சரில் நடைபெற்ற தேசிய சப்ஜூனியர் கால்பந்து சாம்பியன்ஷிப் போட்டியில் மேற்குவங்கம் 3-0 என்ற கோல் கணக்கில் தில்லியை வீழ்த்தி கோப்பையைக் கைப்பற்றியது.

**<<<<>>>>**

இரண்டு நாள் பயணமாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இன்று அசாம் மாநிலத்திற்கு செல்கிறார்.

குவஹாத்தி நதியின் முகத்துவாரம் மற்றும் குவஹாத்தி நதி மேலாண்மை திட்டங்களை அவர் தொடங்கி வைக்கிறார்.

மேலும் குவஹாத்தியில் மாநில பல்கலைக்கழகம் அமைப்பதற்கான அடிக்கல்லையும் அவர் நாட்டுகிறார்.

அதன் பின்னர் மோரிகான் மாவட்டத்தில் செமிகண்டக்டர் மையத்தை அவர் பார்வையிடுகிறார்.

நாளை பிஷ்வநாத் மாவட்டத்தில் உள்ள தேயிலைத் தோட்டங்களை அவர் பார்வையிடுகிறார்.

<<<<>>>>

போலியான முதலீடுகளை ஊக்குவிக்கும் விளம்பரங்களை முக்கிய சமூக வலைதளங்கள் மற்றும் தேடு பொறிகள் வெளியிட வேண்டாம் என்று செபி என்றழைக்கப்படும் இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம் கேட்டுக்கொண்டுள்ளது.

செபி அமைப்பிடம் பதிவு செய்துள்ளவர்கள் மட்டுமே முதலீடுகள் மற்றும் சேவைகள் குறித்து விளம்பரம் வெளியிடலாம் என்றும் கூறியுள்ளது.

மேலும் உண்மையான முதலீடுகளைக் காண சில பிரத்யேக குறியீடுகளை நிறுவனங்கள் வெளியிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளது.

முதலீட்டாளர்கள் பதிவு செய்யப்பட்ட வர்த்தக அமைப்புகள் மூலமாக ஆன்லைன் வர்த்தகங்களை மேற்கொள்ளலாம் என்று கூறியுள்ளது.